# அருந்தமிழில் ஆயிரத்தெட்டு அருள்மிகு ஐ

# நாமங்கள்.

## ஓம் கன்னிமூல மகா கணபதி

1 அரிகர சுதனே
2 அச்சங்கோவில் அரசே
3 அகிலலோக நாயகனே
4 அகத்தில் நிறைந்தவனே
5 அகங்குளிரச் செய்வோனே
6 அகந்தை அழிப்பவனே
7 அஞ்ஞானம் ஒழிப்பவனே
8 அருந்தமிழ்த் தேனே
9 அன்பர்க்கு அருள்பவனே
10 அன்பின் வடிவானவனே
11 அருளும் தெய்வமே
12 அல்லல் களைபவனே
13 அடியவர்க்கு எளியவனே
14 அகங்காரம் ஒழிப்பவனே
15 அலங்காரப் பிரியனே
16 அச்சந் தவிர்ப்பவனே
17 அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனே
18 அன்னதானப்பிரபுவே
19 அருள்மிகு தெய்வமே
20 அக்கினிக் குண்டத்துறைபவனே
21 அடியவர் குல தெய்வமே
22 அடியவர் வினை தீர்ப்பவனே
23 அகமாயை அழிப்பவனே
24 அறிவு தரும் ஒளிச்சுடரே

25 அன்பர்க்கு அன்பனே

26 அன்பே ! அருளே !

27 அமுதே ! தேனே !

28 அறிவே ! பொருளே !

29 அறத்தின் தலைவா !

30 அருள் பொழியும் தேவனே

31 அறம் காக்கும் தெய்வமே

32 அன்புளத்தில் உறைபவனே

33 அழியாத பேரொளியே

34 அழகின் திருவுருவே

35 அடிபணிந்தாரக்கு அருள்பவனே

36 அகத்தினிலே நிறைந்திடுவாய்

37 அஞ்ஞானம் அழித்திடுவாய்

38 அகங்குளிரச் செய்திடுவாய்

39 அருள் மழை பொழிந்திடுவாய்

40 அச்சமெல்லாம் போக்கிடுவாய்

41 அடிபணிந்தோம் காத்திடுவாய்

42 அறிவின்மையை போக்கிடுவாய்

43 அருந்தமிழாய் இனித்திடுவாய்

44 அகிலமெல்லாம் காத்திடுவாய்

45 அல்லல் எல்லாம் தீர்த்திடுவாய்

46 அடியவர்க்கு அருளிடுவாய்

47 அடிபணிந்தோம் வினைதீர்ப்பாய்

48 அறிவு தந்து ஒளிதருவாய்

49 அன்புள்ளம் தந்திடுவாய்

50 அடியவர் குலம் காப்பாய்

51 அறம் பிழைக்கத்துணை நிற்பாய்

52 அருளமுதம் பொழிந்திடுவாய்

53 அகிலமெல்லாம் காப்பவனே

54 அகிலாண்டேசுவரி மகனே

55 அண்ணபூரணி சுதனே

56 அங்கயற்க்கண்ணி புத்திரனே

57 அக்கிரமத்தை அழிப்பவனே

58 அகத்தியர்க்கு அருளியவனே

59 அடிமைத்தளை களைபவனே

60 அருமருந்தே ! அமுதே !

61 அற்புதமே ! கற்பகமே !

62 அஞ்சா நெஞ்சம் அழித்திடுவாய்

63 அழியாப் புகழ் தருவாய்

64 அதிர்வேட்டுப் பிரியனே

65 அருள்பொழியும் சாஸ்தாவே

66 அம்மையும் அப்பனும் நீயே

67 அடைக்கலம் நீயே

68 அண்டினோரை ஆதரிப்பாய்

69 அமைதி காத்திடுவாய்

70 அம்பிகையின் புதல்வனே

71 அவனியெல்லாம் காப்பவனே

72 அருந்தவப்புத்திரனே

73 அழுதவரை ஆதரிப்பாய்

74 அறவழி காட்டிடுவாய்

75 அறிவொளி ஊட்டிடுவாய்

76 அறியாமை அகற்றிடுவாய்

77 அனாதை ரட்சகனே !

78 அநியாயம் அழிப்பவனே

79 அருந்தவசிகள் தலைவனே !

80 அறிவாற்றல் தந்திடுவாய்

81 அடியவரின் வழித்துணையே

82 அழியாப் பரம்பொருளே

83 அம்பிகையின் மகனே

84 அரக்கியை அழித்தவனே

85 அரனார் புத்திரனே

86 அருட்பெருஞ்சோதியே

87 ஆரியங்காவு அய்யாவே

88 ஆபத்தில் காப்பவனே

89 ஆசைகளைத் தவிர்ப்பவனே

90 ஆதிபராசக்தி மகனே

91 ஆதி பரம்பொருளே

92 ஆறுமுகன் தம்பியே

93 ஆக்கம் அளிப்பவனே

94 ஆதாரம் நீயே

95 ஆசிரியன் ஆனவனே

96 ஆடம்பரம் வெறுப்பவனே

97 ஆணவம் அழிப்பவனே

98 ஆதரிக்கும் தெய்வமே

99 ஆசிமலர் பொழிந்திடுவாய்

100 ஆதிசக்தி மைந்தனே

101 ஆதி நீயே ! ஜோதி நீயே !

102 அறுபடையான் தம்பியே

103 ஆனைமுகன் தம்பியே

104 ஆற்றலைக் கொடுப்பவனே

105 ஆனந்த ரூபனே

106 ஆனந்தம் அளிப்பவனே

107 ஆயிரம் கண்ணுடையாய்

108 ஆதிமூல நாயகனே

109 ஆண்மை தரும் தெய்வமே

110 ஆண்மையின் இலக்கணமே

111 ஆதரிப்பாய் ஏழைகளை

112 ஆதவனின் பேரொளியே

113 ஆதாரம் நீயே அருளிடுவாய்

114 ஆயகலை அத்தனையும் கற்றவனே

115 ஆராவமுதனே ! ஐயனே !

116 ஆலால சுந்தரன் சுதனே

117 ஆவல் தணிப்பவனே

118 ஆவிபொருள் அடிசரணம்

119 ஆழிகாலத் தலைவனே

120 ஆளப் பிறந்தவனே

121 ஆற்றல் மிகுந்தவனே

122 ஆதியந்த மற்றவனே

123 ஆரண்ய வாசனே

124 ஆதிக்கும் ஆதியே

125 ஆதிசிவன் மகனே

126 ஆயுளைத் தருபவனே

127 ஆலகாலன் மகனே

128 ஆயுளைத் தந்திடுவாய்

129 ஆனந்த சித்தனே

130 ஆனந்தம் மிகு பஜனைப் பிரியனே

131 இன்தமிழ்ச் சுவையே

132 இன்பமே ! தேனே !

133 இச்சை தவிர்ப்பவனே

134 இருமுடிப் பிரியனே

135 இம்மையில் அருள்பவனே

136 இன்னல் களைவோனே

137 இஷ்ட குல தெய்வமே

138 இளமுருகன் தம்பியே

139 இனியவனே ! எளியவனே !

140 இல்லமெல்லாம் உறைபவனே

141 இசையில் சிரிப்பவனே

142 இடர் களையும் ஏந்தலே

143 இணையில்லா தெய்வமே

144 இதயத்தில் நிறைந்தவனே

145 இரக்கம் மிகுந்தவனே

146 இருள் நீங்கச் செய்வோனே

147 இல்லறத்தைக் காப்பவனே

148 இறைவா நிலை தருவோனே

149 இறைவனின் திருமகனே

150 இன்பங்கள் தருபவனே

151 இன்னிசைக்கு இசைபவனே

152 இளமை தருபவனே

153 இளமையின் திருவுருவே

154 இன்தமிழாய் இனிப்பவனே

155 இச்சை தவிர்ப்பாய்

156 இருமுடி சுமந்துவந்தோம்

157 இம்மையில் அருளிடுவாய்

158 இன்னல் களைந்திடுவாய்

159 இனிய மனந்தருவாய்

160 இல்லத்தில் உறைந்திடுவாய்
161 இடர்களை நீக்கிடுவாய்
162 இதயத்தில் நிறைந்திடுவாய்
163 இருள் நீங்கச் செய்திடுவாய்
164 இல்லறத்தைக் காத்திடுவாய்
165 இருமுடியில் இருப்பவனே
166 இன்பங்கள் தந்திடுவாய்
167 இன்னிசைக்கு இசைந்திடுவாய்
168 இளமையினைத் தந்திடுவாய்
169 இன்தமிழாய் இனித்திடுவாய்
170 இடபத்தோன் திருமகனே
171 ஈசனின் திருமகனே
172 ஈடில்லாத் தெய்வமே
173 ஈஸ்வரியின் புத்திரனே
174 ஈகையிற் சிறந்தவனே
175 ஈடில்லா வாழ்வளிப்பாய்
176 ஈகையுள்ளம் தருபவனே
177 ஈகையுள்ளம் தந்திடுவாய்
178 உமையவள் புத்திரனே
179 உண்மைப் பரம்பொருளே
180 உத்தமனே ! சத்தியனே !
181 உலகாளும் தெய்வமே
182 உலகின் முதற்பொருளே
183 உறுதி மிகக் கொண்டவனே
184 உள்ளம் எல்லாம் நிறைந்தவனே
185 உண்மையுள்ளம் கொண்டவனே
186 உத்தமருக்கு அருள்பவனே

187 உணர்வில் ஒளிர்பவனே
188 உண்மை நெறி காட்டிடுவாய்
189 உயிரெல்லாம் காப்பவனே
190 உடல் நோய் தீர்ப்பவனே
191 உளநோய் ஒழிப்பவனே
192 உற்றதுணையானவனே
193 உள்ளத்தில் உறைபவனே
194 உண்மையின் திருவுருவே
195 உயிர்படைத்த நாயகனே
196 உத்திரத்தில் உதித்தவனே
197 உருவமிலாப் பேருருவே
198 உருத்திராட்சம் அணிந்தவனே
199 உண்மையினை உணர்த்திடுவாய்
200 உத்தமனாய் ஆக்கிடுவாய்
201 உலகமெல்லாம் காத்திடுவாய்
202 உறுதியுள்ளம் காத்திடுவாய்
203 உள்ளத்தில் நிறைந்திடுவாய்
204 உண்மையுள்ளம் தந்திடுவாய்
205 உத்தமரைக் காத்திடுவாய்
206 உணர்வில் உணர்த்திடுவாய்
207 உயிரெல்லாம் காத்திடுவாய்
208 உடல் நோயைத் தீர்த்திடுவாய்
209 உளநோயை ஒழித்திடுவாய்
210 உற்ற துணையாயிருப்பாய்
211 ஊமைக்கருள் புரிந்தவனே
212 ஊழ்வினை ஒழிப்பவனே
213 ஊக்கம் மிகுந்தவனே

214 ஊனுடலைக் காப்பவனே

215 ஊமைகளைக் காத்திடுவாய்

216 ஊழ்வினையை அழித்திடுவாய்

217 ஊக்கம் தந்திடுவாய்

218 ஊரெல்லாம் காத்திடுவாய்

219 ஊர்தோறும் உறைபவனே

220 எல்லோர்க்கும் அருள்பவனே

221 எளியவர்க்கு எளியவனே

222 எங்கள் குலதெய்வமே

223 எந்நாளும் காப்பவனே

224 எழில் மிக்க தெய்வமே

225 எழுபிறப்பும் நாயகனே

226 எந்தையே ! ஐயனே !

227 எந்தாயே தெய்வமே !

228 என்குருவே ! ஈசனே !

229 எட்டுக்குடிவேலன் தம்பியே !

230 எண்ணத்தில் நிறைந்தவனே

231 எங்கும் நிறைந்தவனே

232 என்னுள்ளத்தில் உறைபவனே

233 என்குறைகள் தீர்ப்பவனே

234 எங்கும் உன் அருளே

235 எமையாளும் தெய்வமே

236 எமக்கருள் புரிந்தவனே

237 எல்லாம் உன் விளையாட்டே

238 எல்லாம் வல்லவனே

239 எண்ணியதை அருள்பவனே

240 எந்நாளும் துணைநீயே

241 எல்லோர்க்கும் அருள்செய்வாய்
242 எளியவர்க்கு இரங்கிடுவாய்
243 எங்கள் குலம் காத்திடுவாய்
244 எந்நாளும் துணையிருப்பாய்
245 எழில் உருவம் தந்திடுவாய்
246 எழுபிறப்பும் துணையிருப்பாய்
247 எந்தையாய்க் காத்திடுவாய்
248 எந்தாயாய் அருள்செய்வாய்
249 என்குருவாய் வந்திடுவாய்
250 எண்ணத்தில் உறைந்திடுவாய்
251 எங்கும் நிறைந்திருப்பாய்
252 என்னுளத்தில் சிரித்திருப்பாய்
253 எம்குறைகள் நீக்கிடுவாய்
254 எமையாண்டு அருள்புரிவாய்
255 எண்ணியதைத் தந்திடுவாய்
256 எம்முகம் பார்த்திடுவாய்
257 எருமேலி தர்மசாஸ்தாவே
258 ஏழைப்பங்காளனே
259 ஏழைகளின் தலைவனே
260 ஏகாந்த மூர்த்தியே
261 ஏற்றம் தருபவனே !
262 ஏக்கம் தீர்ப்பவனே
263 ஏழ்மையை ஒழிப்பவனே
264 ஏசுவோர்க்கும் இரங்குபவனே
265 ஏழைகளுக்கு அருள் செய்வாய்
266 ஏற்றம் மிகத் தந்திடுவாய்
267 ஏக்கம் தீர்த்தருள்வாய்

268 ஏழ்மையைப் போக்கிடுவாய்
269 ஏசுவோர்க்கும் அருள் செய்வாய்
270 ஏற்றமானூரப்பன் மகனே
271 ஐங்கரன் தம்பியே
272 ஐயம் தீர்ப்பவனே
273 ஐந்துமலைக் கதிபதியே
274 ஐயனார் தெய்வமே
275 ஐயமெல்லாம் தீர்த்திடுவாய்
276 ஐந்துமலை தாண்டிவந்தோம்
277 ஐம்புலன்களை அடக்கிடுவாய்
278 ஐம்பூத நாயகனே
279 ஐயப்பா ! தெய்வமே
280 ஒப்பிலாத் திருமணியே
281 ஒளிரும் திருவிளக்கே
282 ஒப்புவமை இல்லாதவனே
283 ஒற்றுமை தருபவனே
284 ஒளிவிளக்கே ! ஓவியமே
285 ஒளி தந்து காத்திடுவாய்
286 ஒற்றுமையைத் தந்திடுவாய்
287 ஒளிபடைத்த கண்ணிணாய்
288 ஒருநாளும் உனை மறவோம்
289 ஒன்றுபட்டு வந்து நின்றோம்
290 ஒழித்திடுவாய் தீவினையை
291 ஒளிதருவாய் எம்வாழ்வில்
292 ஓங்காரப் பரம்பொருளே
293 ஓவியமே ! காவியமே !
294 ஓதும் மறைபொருளே

295 ஓடிவந்து காப்பவனே
296 ஓங்கார ரூபனே
297 ஓய்வின்றி உனைத்தொழுதோம்
298 ஓம்சக்தி மகனே
299 ஓங்கியுயர்ந்த மலைவாசா
300 ஓடிவந்தருள் புரிவாய்
301 ஔவைத் தமிழமுதே
302 ஔடதங்கள் அருள்பவனே
303 கலியுக வரதனே
304 கருணா மூர்த்தியே
305 கண்ணழகு நிறைந்தவனே
306 கவிதைகளில் சிரிப்பவனே
307 கவின் தமிழில் இருப்பவனே
308 கந்தனின் தம்பியே
309 கணக்கு கடந்தவனே
310 கனிச்சுவையே ! பழரசமே !
311 கற்கண்டாய் இனிப்பவனே
312 களங்கம் தீர்ப்பவனே
313 கலங்காத மனந்தருவாய்
314 கனிவான குணந்தருவாய்
315 கற்பூர ஜோதியே
316 கற்பூரப் பிரியனே
317 கணபதியின் தம்பியே
318 கங்கை முடியான் புத்திரனே
319 கடைத்தேற அருள்பவனே
320 கட்டுப்பாடு தந்தவனே
321 கண்டெடுத்த மணிகண்டா

322 கண்கண்ட தெய்வமே

323 கண்ணின் கருமணியே

324 கதிநீயே விதிநீயே

325 கதிர்காமன் தம்பியே

326 கரிமுகத்தான் தம்பியே

327 கருணை மிகுந்தவனே

328 கரும வினை தீர்ப்பாய்

329 களையெல்லாம் கற்றவனே

330 கல்விக் களஞ்சிய்மே

331 கவலை தீர்ப்பவனே

332 களைப்பைப் போக்கிடுவாய்

333 கற்பகத் தருவே

334 கற்றவர்க்கு கனிரசமே

335 கலி நீங்க வரந்தருவாய்

336 கருணை மழை பொழிந்திடுவாய்

337 கண்ணழகு தந்திடுவாய்

338 கண்ணொளியைக் காத்திடுவாய்

339 கண் நோய் போக்கிடுவாய்

340 கவிபாடத் தமிழ் தருவாய்

341 கவின் தமிழில் சிரித்திடுவாய்

342 களங்கம் தீர்த்திடுவாய்

343 கடைத்தேற வழி சொல்வாய்

344 கடமையினைச் செய்திடுவாய்

345 கட்டுப்பாடு மனந்தருவாய்

346 கலையெல்லாம் காத்திடுவாய்

347 கல்வி பல தந்திடுவாய்

348 கவலைகளைத் தீர்த்திடுவாய்

349 கடம்பனின் சோதரனே
350 கரிமலையில் உறைபவனே
351 கருப்பசாமியின் நாயகனே
352 கனதவ விரதனே
353 கஷ்டங்களைத் தீர்ப்பவனே
354 கட்டேந்தி சபரிவந்தோம்
355 கண்ணுக்கு இமையானவனே
356 கர்வம் களைந்திடுவாய்
357 கள்ளமிலா உளம் தருவாய்
358 கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
359 காந்தமலை ஜோதியே
360 காருண்ய மூர்த்தியே
361 காவியத்தின் நாயகனே
362 கானகத்தில் கிடைத்தவனே
363 காவல் தெய்வமே
364 காத்திடுவாய் ஏழைகளை
365 காக்கின்ற கடவுளே
366 கார்த்திகையில் மாலையிட்டோம்
367 காடுமலை கடந்து வந்தோம்
368 காமாட்சி புத்திரனே
369 காயத்திரி புதல்வா
370 கார்த்திகேயன் தம்பியே
371 காலத்தை வென்றவனே
372 காலமெல்லாம் காப்பவனே
373 காலங் கடத்திடாதே
374 காப்பாற்று மிகவிரைந்தே
375 காட்டு கனிமுகத்தை

376 காசினியில் பெரியவனே
377 காவினிலே வாழ்பவனே
378 காற்றோடு கலந்திருப்பாய்
379 காமத்தைப் போக்கிடுவாய்
380 காளைகட்டியில் உறைபவனே
381 காலை மாலை பூஜை செய்தோம்
382 காலமெல்லாம் சரணம் சொன்னோம்
383 காவியுடை தரித்தவனே
384 கிருபை செய்தருள்வாய்
385 கிரக குறை தீர்ப்பவனே
386 கீர்த்தி மிக்கவனே
387 கீர்த்தி தருபவனே
388 கீழ்மை நீக்கிடுவாய்
389 கீர்த்தி அளித்திடுவாய்
390 குருவின் குருவே
391 குருவின் குறைதீர்த்தவனே
392 குருதட்சிணை அளித்தவனே
393 குறைகள் தீர்ப்பவனே
394 குற்றம் பொறுப்பவனே
395 குஷ்டத்தை தீர்ப்பவனே
396 குழந்தைக் குறை தீர்ப்பவனே
397 குன்றின் மேலமர்ந்தவனே
398 குறைகளை நீக்கிடுவாய்
399 குற்றங்கள் பொருத்தருள்வாய்
400 குழந்தை மனம் கொண்டவனே
401 குளத்துபுழைப் பாலகனே
402 குழந்தையில்லாக் குறை தீர்ப்பாய்

403 குன்றனைய குணத்தோனே
404 குருடர் குறை தீர்ப்பவனே
405 குருடர்க்கு ஒளிதருவாய்
406 குகனின் தம்பியே
407 குடிகாக்கும் குலவிளக்கே
408 குடும்ப அமைதி காப்பவனே
409 குணக்குன்றே ! ஐயனே !
410 குணசீலா ! பாலா !
411 குமரனின் தம்பியே
412 குலதெய்வமானவனே
413 குலம் தழைக்கச் செய்திடுவாய்
414 குவலயம் காப்பவனே
415 குத்துவிளக்கு ஒளியே
416 கூத்தாடியின் மகனே
417 கெட்ட எண்ணங்களை அழிப்பவனே
418 கேடிலா மனந்தருவாய்
419 கேள்விச் செல்வம் தருபவனே
420 கேட்டதை அருள்பவனே
421 கேடுவராது காப்பவனே
422 கைதூக்கிக் காப்பவனே
423 கைதொழுதோம் ! காப்பாயே !
424 கைலாசநாதன் மகனே !
425 கொடுமையைக் களைபவனே
426 கொடியவரைக் கொன்றவனே
427 கொடையளிக்கும் வள்ளலே
428 கொஞ்சுகின்ற தமிழ்மொழியே
429 கோவில் மணி ஒலியே

430 கோவேந்தன் திருமகனே
431 கோபாலன் தவமகனே
432 கோபத்தை வெறுப்பவனே
433 கோபத்தைத் தணித்தருள்வாய்
434 கோடிமுறை உனை அழைத்தோம்
435 கோடிகோடியாய் குவிப்பாய்
436 கோவில் எல்லாம் உன்கோவில்
437 கோடானுகோடி பக்தர் வந்தோம்
438 கோடையிலும் குளிர்பவனே
439 கோவிந்தன் புத்திரனே
440 கௌரியின் திருமகனே
441 சக்தியின் புத்திரனே
442 சற்குருவே ! சுவாமியே
443 சகல கலை வல்லோனே
444 சகல பாக்கியம் தருபவனே
445 சக்ரபாணியின் மகனே
446 சஞ்சலம் தீர்ப்பவனே
447 சக்தியை அளிப்பவனே
448 சங்கடங்கள் தீர்ப்பவனே
449 சரண கோஷப்பிரியனே
450 சங்கத் தமிழமுதே
451 சக்திவேலன் தம்பியே
452 சபரிமலை வாசனே
453 சபரிக்கருள் செய்தவனே
454 சரவணன் தம்பியே
455 சரணம் உன் பாதமலர்
456 சத்துரு சம்ஹாரனே

457 சர்வரோக நிவாரணனே
458 சத்தியத்தின் திருவுருவே
459 சத்தியத்தைக் காப்பவனே
460 சலிப்படையா மன ந்தருவாய்
461 சமய நெறி காத்தவனே
462 சமயத்தில் உதவிடுவாய்
463 சமரச மனந்தருவாய்
464 சாந்த சொரூபனே
465 சாந்தம் அளிப்பவனே
466 சாது ஜனப் பிரியனே
467 சாபங்கள் தீர்ப்பவனே
468 சாமிநாதனின் தம்பியே
469 சாஸ்தாவே ! சுவாமியே
470 சாந்தி தரும் பேரழகே
471 சாதிவெறி ஒழிப்பவனே
472 சிறுமை அழிப்பவனே
473 சிற்றின்பம் வெறுப்பவனே
474 சிங்காரவேலன் தம்பியே
475 சிந்தை குளிரச்செய்பவனே
476 சிரமங்கள் தீர்ப்பவனே
477 சித்தம் தெளிவிப்பாய்
478 சிக்கலைத் தீர்ப்பவனே
479 சித்தாடும் பெகுங்குருவே
480 சித்தர்கள் போற்றும் தேவனே
481 சிரித்த முகமுடையவனே
482 சிவன்மால் திருமகனே
483 சிவகாமியின் மகனே

484 சித்திரை நிலவொளியே
485 சீராளா ! குணசீலா
486 சுந்தரவடிவானவனே
487 சுத்தமனம் தருபவனே
488 சுகங்கள் அளிப்பவனே
489 சுடரொளியே ! திருவிளக்கே !
490 சுடராகத் திகழ்பவனே
491 சுடுநெருப்பில் உறைபவனே
492 சுணங்காமல் காப்பாய் நீ
493 சுணையாகக் குளிர்பவனே
494 சுப்பிரமணியன் தம்பியே
495 சுமைகளைக் குறைத்திடுவாய்
496 சூரியனின் பேரொளியே
497 சூழ்ச்சிகளை முறியடிப்பாய்
498 செந்தமிழில் சிரிப்பவனே
499 செல்வங்கள் தருபவனே
500 செந்திலதிபன் தம்பியே
501 சேவற்கொடியோன் தம்பியே
502 சேய்மனம் கொண்டவனே
503 சொர்க்கத்தின் அதிபதியே
504 சொந்தபந்தம் வெறுத்தவனே
505 சொல்லற்கரியவனே
506 சோதியாய்த் திகழ்பவனே
507 சோதனை செய்பவனே
508 சோம்பலை அழித்திடுவாய்
509 சௌபாக்கியம் அருள்பவனே
510 ஞாயிற்றின் உள்ளொளியே

511 ஞானத்தின் மறுவடிவே
512 ஞானம் மிகத் தருவோனே
513 ஞாலம் எல்லாம் காப்பவனே
514 ஞானச் சுடர்ஒளியே
515 ஞான ஒளி தந்திடுவாய்
516 ஞானாம்பிகை திருமகனே
517 தங்கம்போல் மேனியனே
518 தணிகாசலன் மகனே
519 தடைகளை நீக்கிடுவாய்
520 தட்டாமல் வந்திடுவாய்
521 தணலாகச் சுடுவோனே
522 தவறுகளைப் பொறுத்தருள்வாய்
523 தமிழாக இனித்திருப்பாய்
524 தமிழால் உனை அழைத்தோம்
525 தமிழ்க் கடவுள் தம்பியே
526 தருமங்கள் காத்திடுவாய்
527 தஞ்சமாகச் சரணடைந்தோம்
528 தயங்காமல் அருள்புரிவாய்
529 தவக்கோலம் பூண்டவனே
530 தலைவலியைத் தீர்த்தவனே
531 தண்டாயுதபாணி தம்பியே
532 தள்ளாடி நடந்துவந்தோம்
533 தரணிபோற்றும் தெய்வமே
534 தவறாமல் வந்தருள்வாய்
535 தண்ணீரில் குளிர்பவனே
536 தயாநிதியே ! சுவாமியே !
537 தடுமாறும் நெஞ்சம் இது

538 தடுத்தாண்டு கொள்வாய் நீ
539 தாயாகிக் காப்பவனே
540 தாகத்தைத் தீர்ப்பவனே
541 தாங்காத துயர் தீர்ப்பாய்
542 தானங்கள் தழைக்கச் செய்வாய்
543 தானியங்கள் விளைவிப்பாய்
544 தானைத் தலைவனே
545 தாய்போல் அன்புடையவனே
546 திங்கள் போல் முகத்தோனே
547 திகட்டாத இன்பந் தருவாய்
548 திக்கற்றவர்க்குத் துணையாவாய்
549 திசையெல்லாம் திகழ்பவனே
550 திருநிறைச் செல்வனே
551 தித்திக்கும் தேன் தமிழே
552 தியானத்தில் இருப்பவனே
553 திருவேங்கடன் திருமகனே
554 திருச்செந்தூரன் தம்பியே
555 திருமால் திருமகனே
556 திருவாய் மலர்ந்தருவாய்
557 திடமான மனந்தருவாய்
558 திடகாத்திரம் தருவாய்
559 திரண்ட செல்வம் தருவாய்
560 திருமந்திர நாயகனே
561 திருமங்கள மூர்த்தியே
562 திருவும் புகழும் தருபவனே
563 திண்ணிய மனந்தருபவனே
564 தீந்தமிழின் சுவையே

565 தீமைகளைக் களைபவனே

566 தீய எண்ணங்களை அழிப்பவனே

567 தீண்டாமையை ஒழித்தவனே

568 தீதில்லாக் குணந்தருவாய்

569 தீச்செயல்கள் வெறுப்பாய்

570 தீன தயாளனே சுவாமி

571 தீதகற்றும் பேரொளியே

572 தீச்சுடராய் ஒளிர்பவனே

573 தீபஜோதித் திருஒளியே

574 தீபமங்கள ஜோதியே

575 தீபத்தில் உறைபவனே

576 தீமையல்லா வாழ்வளிப்பாய்

577 தீராத நோய் தீர்ப்பவனே

578 தீராநோய் தீர்க்கும் மருந்தே

579 துறக்கோலம் பூண்டவனே

580 துணையாக நிற்பவனே

581 தும்பிக்கையான் தம்பியே

582 துன்பங்கள் தீர்ப்பவனே

583 துஷ்டர்களை ஒழிப்பவனே

584 துணிவுள்ளம் தருபவனே

585 துதிப்போர்க்கு அருள்பவனே

586 துயரங்கள் போக்கிடுவாய்

587 துக்கநிலை மாற்றிடுவாய்

588 துவண்டவர்க்குத் துணையாவாய்

589 துளசிமணி மார்பனே

590 தூயவுள்ளம் தருபவனே

591 தூய்மை நிறைந்தவனே

592 தூங்காத மனந் தருவாய்
593 தூப தீபப் பிரியனே
594 தெவிட்டாமல் இனிப்பவனே
595 தெய்வத்தின் தெய்வமே
596 தெள்ளமுதே ! தேனே !
597 தென்னவர் குலதெய்வமே
598 தென்றலாய்க் குளிர்பவனே
599 தெளிவுள்ளம் தருவனே
600 தேன்போல் இனிப்பவனே
601 தேன் தமிழில் இருப்பவனே
602 தேசமெல்லாம் நிறைந்தவனே
603 தேங்காய் நெய்ப்பிரியனே
604 தேடுகிறோம் உன்னடியை
605 தேவர் போற்றும் தெய்வமே
606 தேடி வந்த செல்வம் நீயே
607 தேடற்கரியவனே
608 தேவர் துயர்களைந்தவனே
609 தேவாதி தேவனே
610 தேவியின் திருமகனே
611 தைரியம் தருபவனே
612 தொண்டுள்ளம் தந்திடுவாய்
613 தொண்டருக்குத் தொண்டனே
614 தொல்லைகளை நீக்கிடுவாய்
615 தொடர்ந்து வந்து துணையாவாய்
616 தொட்டது துலங்கச் செய்வாய்
617 தோன்றாத் துணையாவாய்
618 தோழனாக வந்திடுவாய்

619 தோல்வியில்லா வாழ்வளிப்பாய்

620 தோள்வலிமை தந்திடுவாய்

621 தோஷங்கள் நீக்கிடுவாய்

622 தோல்வியாதி போக்கிடுவாய்

623 தோணிபோல் கரைசேர்ப்பாய்

624 தோற்றமாகி அருள்புரிவாய்

625 நடுக்காட்டிலிருப்பவனே

626 நன்மையெல்லாம் தந்திடுவாய்

627 நம்பி கை தொழுதோம்

628 நல்லறிவைத் தந்திடுவாய்

629 நல்வழியைக் காட்டிடுவய்

630 நல்வாழ்வு அளித்திடுவாய்

631 நன்றிமறவா மனந்தருவாய்

632 நல்லவர்க்கு நலந்தருவாய்

633 நண்பனாக வந்திடுவாய்

634 நல்லவர் போற்றும் நாயகனே

635 நடராசன் திருமகனே

636 நடந்துவந்தோம் உன்மலைக்கு

637 நற்பயன்கள் தந்திடுவாய்

638 நஷ்டங்கள் தவிர்த்திடுவாய்

639 நற்பணிகள் காத்திடுவாய்

640 நந்தா விளக்கே நாயகனே

641 நயவஞ்சகரை அழித்திடுவாய்

642 நடுநிலைமை மனந்தருவாய்

643 நறுமணப்பிரியனே

644 நலங்காக்கும் நாயகனே

645 நல்லொழுக்கம் தந்திடுவாய்

646 நலிந்தவர்க்கு உதவிடுவாய்

647 நவரத்தினப் பேரொளியே

648 நாகராசன் அன்பனே

649 நானிலம் போற்றும் நாயகனே

650 நாடி வந்தோம் உன்மலைக்கு

651 நாயகனே காத்திடுவாய்

652 நாடெலாம் தொழும் தேவனே

653 நாதனே நலந்தருவாய்

654 நிலவாக ஒளிதருவாய்

655 நில்லாமல் ஓடி வா ! நீ

656 நித்திய பிரம்மச்சாரியே

657 நின்பாதம் சரணடைந்தோம்

658 நினைவெல்லாம் உன் உருவே

659 நினைத்தவுடனே துணையாவாய்

660 நித்தம் உனைப் பணிவோம்

661 நீதி தந்து அருள்புரிவாய்

662 நியாயத்தைக் காப்பவனே

663 நியமம் தவறாதவனே

664 நிலமெல்லாம் தழைக்கச் செய்வாய்

665 நிறைவுள்ளம் தருபவனே

666 நிதானம் அளிப்பவனே

667 நினைத்ததை நடத்தி வைப்பாய்

668 நிலையான வாழ்வளிப்பாய்

669 நிலைத்திருக்கும் செல்வமே

670 நிறைந்த செல்வம் தந்திடுவாய்

671 நீலிமலை வாசனே

672 நீங்காத இன்பந்தருவாய்

673 நீண்ட வாழ்வு தந்திடுவாய்
674 நீக்கமற நிறைந்தவனே
675 நீங்காத நினைவானாய்
676 நீலவஸ்திரதாரியே
677 நீயாகவந்திடுவாய்
678 நீதியினைக் காத்திடுவாய்
679 நீர்போல் தெளிந்தவனே
680 நீலகண்டன் மகனே
681 நீண்ட புகழ் தந்திடுவாய்
682 நுண்ணறிவு தந்திடுவாய்
683 நூலறிவு மிகத்தருவாய்
684 நெய்யாபிஷேகப் பிரியனே
685 நெஞ்சில் நிறைந்தவனே
686 நெறிமுறை தழைக்கச் செய்வாய்
687 நெற்றிக்கண்ணார் புத்திரனே
688 நெஞ்சுருகப் பாடிவந்தோம்
689 நெய்த்தேங்காய் சுமந்துவந்தோம்
690 நேர்மை நிலைக்கச் செய்வாய்
691 நேசமுள்ள மனந்தருவாய்
692 நேர்த்தியான குணந்தருவாய்
693 நேரில் வந்து காத்திடுவாய்
694 நேரமிதே ! அருள்புரிவாய்
695 நைந்தவர்க்கு நலம் தருவாய்
696 நொந்தவரைக் காத்திடுவாய்
697 நோன்பிருந்தோம் உனைக்காண
698 பக்தி நெறி பரப்பிடுவாய்
699 பக்கத் துணையாயிருப்பாய்

700 பக்தஜனப் பிரியனே

701 பக்தருக்கருள் செய்பவனே

702 பக்குவ மனந்தருவாய்

703 பகைமையை ஒழிப்பவனே

704 பரந்தாமன் திருமகனே

705 பண்புள்ள மனந்தருவாய்

706 பசுபோல் குணத்தவனே

707 பசித்துன்பம் நீக்கிடுவாய்

708 பணவெறி ஒழிப்பவனே

709 பத்தரை மாற்றுத் தங்கமே

710 பயத்தை ஒழிப்பவனே

711 பர்வதவர்த்தினி மகனே

712 பல்லுயிரையும் காப்பவனே

713 பலரும் போற்றும் தெய்வமே

714 பல்கலையும் பயின்றோனே

715 பழவினைகள் அழித்திடுவாய்

716 பழம்பெருமை காப்பவனே

717 பழிச்சொல் துடைப்பவனே

718 பஞ்சத்தைப் போக்கிடுவாய்

719 பதினெட்டாம் படியோனே

720 பந்தளமன்னன் மகனே

721 பம்பையில் தோன்றியவனே

722 பரமேசுவரன் புத்திரனே

723 பராசக்தி திருமகனே

724 பலத்தைத் தருபவனே

725 பலமதத்தாரும் வணங்குவோனே

726 பரம்பொருளே ! ஜோதியே

727 பகவான் பகவதி திருமகனே
728 பக்தர் குறை தீர்ப்பவனே
729 பந்தபாசம் அறுப்பவனே
730 பந்தளத்து அரசே
731 பகைவரை அழிப்பவனே
732 பஞ்சமி திதியில் பிறந்தவனே
733 பாவிகளைக் காத்தருள்வாய்
734 பாரபட்சமற்றவனே
735 பாட்டுடைய தலைவனே
736 பாக்கியங்கள் தந்திடுவாய்
737 பாசவலையை அறுப்பவனே
738 பாடிவந்தோம் உன் மலைக்கு
739 பானகப் பிரியனே
740 பாதமலர் பணிந்தோம்
741 பாவங்கள் போக்கிடுவாய்
742 பாமரர்க்கு அருள்பவனே
743 பாயாசப் பிரியனே
744 பார் புகழும் தெய்வமே
745 பார்வதியின் புத்திரனே
746 பாராமுகம் ஏனோ
747 பாலமுருகன் தம்பியே
748 பாலபிஷேகப் பிரியனே
749 பார்த்திடுவாய் எம்குறையை
750 பாமாலை சூட்டிடுவோம்
751 பால் போன்ற மனந்தருவாய்
752 பிணிகளைத் தீர்ப்பவனே
753 பிஞ்சு மனங்களைக் காப்பவனே

754 பித்தனின் புத்திரனே
755 பிரம்மச்சரிய விரதப் பிரியனே
756 பில்லி சூனியம் அகற்றுவோனே
757 பிழைகளைப் பொறுத்தருள்வாய்
758 பிள்ளைக் குறை தீர்ப்பவனே
759 பிள்ளைச்செல்வம் தந்தருள்வாய்
760 பித்தம் தெளிவிப்பவனே
761 பிதுர்க்கடன் செய்தவனே
762 பிறைசூடியோன் மகனே
763 பீடத்தில் அமர்ந்தவனே
764 பீடைகளை நீக்கிடுவாய்
765 புகழ் மிகத்தருபவனே
766 புண்ணியங்கள் தந்திடுவாய்
767 புத்தொளியைத் தந்திடுவாய்
768 புலமைமிகத் தந்திடுவாய்
769 புலிப்பாலைக் கொணர்ந்தவனே
770 புலவரெல்லாம் புகழ்பவனே
771 புதிய வாழ்வு தந்திடுவாய்
772 புஷ்கலையின் கணவனே
773 புவனம் போற்றும் தெய்வமே
774 புலாலை வெறுப்பவனே
775 பூதநாதனே ! சுவாமியே
776 பூமியெலாம் நிறைந்தவனே
777 பூவுலகைக் காப்பவனே
778 பூ அலங்காரப் பிரியனே
779 பூவினிலே சிரிப்பவனே
780 பூவாக மணப்பவனே

781 பூரணை மணாளனே
782 பூஞ்சோலையில் இருப்பவனே
783 பூதபடைத் தலைவனே
784 பூசையில் மகிழ்பவனே
785 பெற்றோரை மதிப்பவனே
786 பெரும் வாழ்வு தருபவனே
787 பெருமாளின் திருமகனே
788 பெரும்வியாதி தீர்ப்பவனே
789 பெருமைகள் தருபவனே
790 பேய் பயம் அழிப்பவனே
791 பேசாதவர்க்கும் பேச்சருள்வாய்
792 பேதமை அகற்றிடுவாய்
793 பேதங்கள் போக்கிடுவாய்
794 பேட்டைதுள்ளும் பேரருளே
795 பேணிக்காத்திடுவாய்
796 பேய்களை ஓட்டிடுவாய்
797 பேரும் புகழும் தந்திடுவாய்
798 பேறுகள் யாவும் தந்திடுவாய்
799 பைந்தமிழால் பாடினோம்
800 பைத்தியத்தை மாற்றிடுவாய்
801 பொன்னம்பல வாசனே
802 பொன்னார் மேனியனே
803 பொசுக்கிடுவாய் பாவங்களை
804 பொல்லாதவரை ஒழித்திடுவாய்
805 பொய்மையை வெறுப்பவனே
806 பொங்கிவரும் அருள்தருவாய்
807 பொங்கிவரும் பூம்புனலே

808 பொறுமையினைத் தந்திடுவாய்
809 பொறுப்புணர்ச்சி தந்திடுவாய்
810 பொறுமையில் சிறந்தவனே
811 பொறாமைக் குணம் ஒழிப்பாய்
812 பொருளும் அருளும் தருவாய்
813 போகாத பாவங்களையும் போக்குவாய்
814 போகாத நோய்களையும் நீக்குவாய்
815 போற்றி ! போற்றி ! நின்னடிகள்
816 மங்கள மூர்த்தியே !
817 மரகதத்தின் பேரொளியே
818 மணிகண்ட தெய்வமே
819 மக்கள் குறை தீர்ப்பவனே
820 மகாதேவன் புத்திரனே
821 மகிஷி சம்ஹாரனே
822 மணியோசையில் சிரிப்பவனே
823 மத நெறியை வளர்த்தவனே
824 மதி நுட்பம் தருபவனே
825 மங்கல வாழ்வு தருவாய்
826 மந்திர மூர்த்தியே
827 மமதையை அடக்குபவனே
828 மயில் வாகனன் தம்பியே
829 மலரடி சரணடைந்தோம்
830 மலையாளதேச அதிபதியே
831 மனநிம்மதி தருபவனே
832 மனமகிழ்ச்சி தந்திடுவாய்
833 மனமாயை விலக்கிடுவாய்
834 மகா கணபதி தம்பியே

835 மஞ்சமாதா திருவருளே

836 மங்காத புகழ் தருவாய்

837 மண் சுமந்தோன் மகனே

838 மன்னனின் திருமகனே

839 மண்ணுலகம் போற்றும் தெய்வமே

840 மருதமலையாண்டவன் தம்பியே

841 மன்னித்தருள்வாய் சுவாமியே

842 மன்றாடிவேண்டுகிறோம் ! ஐய்யனே

843 மனமிரங்கி அருளிடுவாய்

844 மனக்கவலை தீர்த்திடுவாய்

845 மக்கட்செல்வம் தந்திடுவாய்

846 மரண பயம் நீக்கிடுவாய்

847 மறவாமல் உனைப் பணிவோம்

848 மண்ணுக்கும் விண்ணுக்கும் நாயகனே

849 மலைபோல் உயர்ந்தவனே

850 மழைபோல் கருணை பொழிவாய்

851 மறுமலர்ச்சி தந்திடுவாய்

852 மனக்கலக்கம் போக்கிடுவாய்

853 மனநோயை அகற்றிடுவாய்

854 மருந்தாகி நோய் தீர்ப்பாய்

855 மலர்மாலை சூட்டிடுவோம்

856 மலட்டுத்தன்மை நீக்கிடுவாய்

857 மயக்கும் பொற்சித்திரமே

858 மண்ணாசை அகற்றிடுவாய்

859 மதிமயக்கம் போக்கிடுவாய்

860 மலையெல்லாம் இருப்பவனே

861 மனைமாட்சி காத்திடுவாய்

862 மனை தோறும் அருள்தருவாய்
863 மறைபோற்றும் மாதவனே
864 மறைநெறிகள் காத்திடுவாய்
865 மலர்ந்த முகத்தோனே
866 மாதவனின் திருமகனே
867 மாணிக்கச் சுடரொளியே
868 மாயையினைக் களைபவனே
869 மார்கழியில் பிறந்தவனே
870 மாயவலை அறுப்பவனே
871 மாசில்ல மாணிக்கமே
872 மாசுகளைக் களைந்திடுவாய்
873 மாசில்லா மனந்தருவாய்
874 மாலின் திருமகனே !
875 மாந்தர் போற்றும் தெய்வமே
876 மானிடப்பிறவி எடுத்தவனே
877 மாட்சிமிகு மனந்தருவாய்
878 மாதவம் புரிந்தவனே
879 மின்னுகின்ற பேரொளியே
880 மிக்கபலன் தந்திடுவாய்
881 மிருகக்குணம் நீக்கிடுவாய்
882 மீனாட்சி திருமகனே
883 மீளாத்துயர் தீர்ப்பவனே
884 மீன்போன்ற விழியுடையாய்
885 முருகனின் தம்பியே
886 முத்தமிழ்ச் செல்வனே
887 முக்தி தருபவனே
888 முழுமுதற்கடவுளே

889 முகஒளி நிறைந்தவனே

890 முக்கண்ணணார் புத்திரனே

891 முன்னின்று காத்திடுவாய்

892 முதுமைத்துயர் தீர்ப்பாய்

893 முற்பிறவித்துயர் தீர்ப்பாய்

894 மும்மூர்த்திக்கும் நாயகனே

895 முயற்சிக்குத் துணைநிற்பாய்

896 முனிவர்கள் போற்றும் தெய்வமே

897 முடநோயை தீர்ப்பவனே

898 முகமலர்ச்சி தருபவனே

899 முத்துக்குமரன் தம்பியே

900 மூலிகைபோல் மருந்தாவாய்

901 மூவர்கள் போற்றும் தெய்வமே

902 மூவுலகும் போற்றும் தேவா !

903 மூவாத வரம் தருவாய்

904 மூவாசை அறுப்பவனே

905 மூர்த்தியிற் சிறந்தவனே

906 மூலப்பொருளானவனே

907 மெய்சிலிர்க்கச் செய்பவனே

908 மெய்மறந்து உனைத்தொழுதோம்

909 மெய்யான தெய்வம் நீயே

910 மெய்யப்பா ! ஐயப்பா !

911 மெய்ப்பொருளை விளக்கிடுவாய்

912 மென்மையான மேனியனே

913 மெழுகாக உருகுகின்றோம்

914 மேனியழகு மிக்கவனே

915 மேன்மை தந்திடுவாய்

916 மேலான பரம்பொருளே
917 மேலுலகம் தொழும் தெய்வமே
918 மோகினி சுதனே
919 மோகத்தை அழிப்பவனே
920 மௌனவிரதப் பிரியனே
921 மௌனிகள் போற்றும் தெய்வமே
922 யாகத்தில் வருபவனே
923 யோகங்கள் தருபவனே
924 யோகசித்தி அருள்பவனே
925 யோகிகளின் தலைவனே
926 ரணங்கள் தீர்ப்பவனே
927 ரத்தத்தில் உறைபவனே
928 ராஜேஸ்வரி மைந்தனே
929 ராஜாதிராஜன் மகனே
930 ரிஷிகள் போற்றும் தெய்வமே
931 ரோகங்கள் தீர்ப்பவனே
932 லட்சார்ச்சனைப் பிரியனே
933 லாபங்கள் தந்திடுவாய்
934 வஞ்சகத்தை ஒழிப்பவனே
935 வஞ்சகரை அழிப்பவனே
936 வலிமையினைத் தருபவனே
937 வன்புலி வாகனனே
938 வறுமைத்துயர் போக்கிடுவாய்
939 வறியவர்க்கு அருள் செய்வாய்
940 வடிவழகுத் தெய்வமே
941 வயிற்றுவலி தீர்த்திடுவாய்
942 வரந்தருவாய் சுவாமியே

943 வள்ளி மணாளன் தம்பியே
944 வற்றாத வளம் தருவாய்
945 வள்ளல் குணம் தந்திடுவாய்
946 வளமான வாழ்வளிப்பாய்
947 வன்முறையை நீக்கிடுவாய்
948 வருவாய்மிகத் தருவாய்
949 வழித்துணையாய் வந்திடுவாய்
950 வழிப்பயணம் காத்திடுவாய்
951 வழிகாட்டி உதவிடுவாய்
952 வண்ணமயில் வாகனன் தம்பியே
953 வருவாய் நீ குருவாக
954 வலம் வந்து தொழுதோமே
955 வலிமைமிகு வரந்தருவாய்
956 வல்லவனே நல்லவனே
957 வல்ல கணபதி தம்பியே
958 வடிவேலன் தம்பியே
959 வழிபட்டு வணங்கிடுவோம்
960 வனத்தினிலே கிடைத்தவனே
961 வணங்கிடுவொம் நின்னடியை
962 வயலூரான் தம்பியே
963 வரம்பில்லாத பக்தி தருவாய்
964 வாய்மையினைக் காத்திடுவாய்
965 வாய்நிறைய வாழ்த்துகிறோம்
966 வாழ்க்கையை செழிக்கச்செய்வாய்
967 வாழ்வாங்கு வாழவைப்பாய்
968 வாயாரப்பாடி நின்றோம்
969 வாடாத முகத்தோனே

970 வாட்டுகின்ற துயர் தீர்ப்பாய்

971 வாரிவழங்கும் வள்ளலே

972 வாபரின் தோழனே

973 வாபருக்கு அருள் செய்தவனே

974 வானோர் போற்றும் தெய்வமே

975 வாழ்வினிலே ஒளிதருவாய்

976 வினைதீர்க்கும் வேதியனே

977 வில்லாளி வீரனே

978 விருப்பு வெறுப்பு அற்றவனே

979 வித்தை பல கற்றவனே

980 வித்தகனே உத்தமனே

981 விண்ணோர் போற்றும் வேதியனே

982 விஞ்ஞானம் வளர்த்திடுவாய்

983 விதிகாக்கும் வித்தகனே

984 விநாயகனின் தம்பியே

985 விபூதி அபிஷேகப் பிரியனே

986 விளக்கொளியாய்த் திகழ்பவனே

987 விடிவெள்ளி போன்றவனே

988 விழிப்புணர்ச்சி தந்திடுவாய்

989 வீரமணி கண்டனே

990 வீரத்திருமகனே

991 வீண்பழியைத் தீர்த்திடுவாய்

992 வீடுதோறும் உறைபவனே

993 வீரம் மிகத் தந்திடுவாய்

994 வெற்றி பல தந்திடுவாய்

995 வெள்ளை உள்ளம் தந்திடுவாய்

996 வெற்றித் திருமகனே

997 வெஞ்சினத்தை அறுப்பவனே
998 வெங்கடேசன் திருமகனே
999 வெற்றி வடிவேலன் தம்பியே
1000 வேதங்கள் போற்றும் தெய்வமே
1001 வேதனைகள் தீர்ப்பவனே
1002 வேண்டும் வரம் தருபவனே
1003 வேழமுகன் தம்பியே
1004 வேலவனுக்கு இளையவனே
1005 வேற்றுமையை நீக்கிடுவாய்
1006 வைத்தீஸ்வரன் மகனே
1007 வையமெல்லாம் செழித்திடவே
1008 வையமெல்லாம் வாழியவே

**Our Sincere Thanks To Mahaysyhaa Shriedhaa Samy (Gopal Kris**
**hardwork In Preparing This Saranam!**